தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தகைய தொழிற் சாலை எண்ணூரில் விரைவில் ஆரம்பிக்கப்படும். நேரடியாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும், மற்ற வெளிநாடுகளுக்கும் அனுப்புகிற நிலைமை விரைவில் ஏற்படும்.

திரு. எம். அய்யாசாமி : தலைவரவர்களே, எண்ணூரில் ஆரம்பிக்க இருக்கிற இந்த தொழிற்சாலை அரசாங்க சார்பில் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறையில் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனியார் துறையில்தான்.

Mr CHAIRMAN : Question No. 144 is postponed.

Fort St. George Gazette

***145. *Q.*—Thiru N. R. THIAGARAJAN** . Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether all parts of the Fort St. George Gazette are published in English and Tamil ; and

(*b*) if all the parts of the Fort St. George Gazette are not published in Tamil, whether there is any proposal to publish them in Tamil also ?

மாநில அரசிதழ்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படுகிறதா?

(இ) தமிழில் மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் வெளியிடப் படவில்லையென்றால், அப்பகுதிகளை தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தமிழ் நாட்டின் அரசிதழின் எல்லா பாகங்களும் ஆங்கிலத்தில் வெளியிடப் படுகின்றன. தவிர, தமிழ்நாட்டு அரசிதழின் இரண்டாம் பாகத்தின் 1-வது, 2-வது பிரிவுகளுக்கும், மூன்றும் பாகத்திற்கும், நான்காம் பாகத்தின் 1-வது 3-வது 4-வது பிரிவுகளுக்கும், ஐந்தாம் பாகத்துக்கும் தேவையான போதெல்லாம் இணைப்புகள் தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளையும் தமிழில் வெளி யிடும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

Construction of houses for Harijans.

***146 Q.—Thiru N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have proposed to construct houses at a cost of Rs. 1,500 each for all the Harijans in Tamil Nad ; and

(*b*) whether it is a fact that the Government have issued orders that these houses should not be constructed on wet lands ?